සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

තෙවන වාර පරීක්ෂණය
மூன்றாம் தவணைப் பரீட்சை - 2026
Third Term Test

| ශ්‍රේණිය / தரம் / Grade | 13 | විෂයය / பாடம் / Subject | கணக்கீடு | පත්‍රය / வினாத்தாள் / Paper | II | පැය / மணித்தியாலம் / Hours | 03 |
|---|---|---|---|---|---|---|---|

**அறிவுறுத்தல்கள்**

- முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட மொத்தமாக 5 வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.
- அனைத்து வினாக்களையும் புதிய தாளில் ஆரம்பிக்கவும்.
- விடைகளுடன் செய்முறைகளை இணைக்கவும்.
- இவ் வினாத்தாள் 200 புள்ளிகளை கொண்டதாகும்.

1. வரையறுக்கப்பட்ட சமாதி பொது கம்பனி உற்பத்தி வியாபார கம்பனியாகும் 2026-03-31 இல் முடிவடைந்த வருடத்திற்காக கம்பனியின் வரைவு வருமான கூற்றும் 2026-03-31 இல் நிதி நிலைமை கூற்றும் கீழ் வருமாறு

2026-03-31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வரைவு வருமான கூற்று

| | ரூபா '000 |
|---|---|
| விற்பனை வருமானம் | 80,000 |
| (-) விற்பனைக் கிரயம் | (35,000) |
| மொத்த இலாபம் | 45,000 |
| பிற வருமானம் | 3,000 |
| | 48,000 |
| விநியோக கிரயம் | (9,000) |
| நிர்வாக செலவு | (12,000) |
| ஏனைய செலவு | (1,000) |
| நிதிக் கிரயம் | (2,000) |
| வரிக்கு முன் இலாபம் | 24,000 |
| வருமான வரி | (2,500) |
| ஆண்டுக்கான இலாபம் | 21,500 |
| ஏனைய முற்றுமடங்கிய வருமானம் | |
| கட்டிட மீள்மதிப்பீட்டு மிகை | 2,000 |
| மொத்த முற்றுமடங்கிய வருமானம் | 23,500 |

2026-03-31 இல் இருந்தவாறான வரைவு நிதிநிலைமை கூற்று

| | | ரூபா '000 |
|---|---|---|
| <u>சொத்துக்கள்</u> | | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | | |
| ஆதன பொறி மற்றும் உபகரணம் | | 68,000 |
| பயன்பாட்டுரிமையுள்ள சொத்துக்கள் | | 5,000 |
| | | 73,000 |
| <u>நடைமுறைச் சொத்துக்கள்</u> | | |
| இருப்பு | | 5,000 |
| வியாபார வருமதிகள் | | 3,000 |
| ஏனைய வருமதிகள் | | 2,500 |

| | | |
|---|---|---|
| காசும் காசுக்கு சமனானவையும் | | 4,500 |
| | | 88,000 |
| <u>உரிமையாண்மையும் பொறுப்புக்களும்</u> | | |
| கூறப்பட்ட மூலதனம் சாதாரண பங்கு | | 51,000 |
| ஓதுக்குகள் | | |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் (கட்டிடம்) | 4,000 | |
| பொது ஒதுக்கம் | 2,000 | |
| நிறுத்திவைக்கப்பட்ட வருவாய் | 25,000 | 31,000 |
| உரிமையாண்மையும் பொறுப்பும் | | 82,000 |
| <u>பொறுப்புக்கள்</u> | | |
| குத்தகை பொறுப்பு | | 3,000 |
| வியாபார சென்மதிகள் | | 2,000 |
| ஏனைய சென்மதிகள் | | 1,000 |
| | | 88,000 |

2026-03-31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்க முன் பின்வரும் தகவல்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

i. 2026-03-31 இல் இருப்புக்களின் பகுப்பாய்வு கீழ் வருமாறு

| | ரூபா '000 |
|---|---|
| மூலப்பொருள் | 2,000 |
| முடிவு பொருள் | 3,000 |

- 2026-03-31 இல் முடிவுப்பொருள் உற்பத்திக் கிரயத்தில் கணிப்பிடப்பட்டுள்ளது. உற்பத்தி கிரயத்தில் 10% இனை முடிவு பொருள் உள்ளடக்கியுள்ளது.
- 2026-03-31 இல் முடிவடைந்த வருடத்திற்காக நேர் ஊழியர்களுக்கு செலுத்திய நேர் சம்பளம் ரூபா 9,000,000 உற்பத்தி கிரயத்தினுள் உள்ளடங்கியுள்ளது. தொழிலாளர், தொழில் கொள்வோரின் EPF க்கான பங்களிப்பு முறையே 10% , 15% தொடர்பாக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை
- 2026-05-01 இல் ரூபா 200,000 எதிர்பார்க்கப்பட்ட விற்பனை மேம்படுத்தல் செலவையும் ரூபா 350,000 விற்பனை செலவையும் உள்ளடக்கிய முடிவுப் பொருள் இருப்பு ரூபா 3,650,000 க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இயக்குனர் சபையினரால் நிதிக்கூற்றுக்களை அங்கீகரித்த திகதி 2026-06-02 இல் ஆகும்.

ii. 2026-03-31 இல் முடிவடைந்த வருடத்திற்கான தயாரிக்கப்பட்ட வரைபு வருமான கூற்றின் காலப்பகுதிக்கான இலாபம் நிறுத்தி வைக்கப்பட்ட வருவாய் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது.

iii. 2025-04-01 இல் வருமான வரி ஏற்பாடு ரூபா 500,000 ஏனைய சென்மதிகளில் உள்ளடங்கியுள்ளது. 2025 / 2026 வருடத்தினுள் செலுத்திய வருமான வரி, வருமான வரியாக வருமான கூற்றில் காட்டப்பட்டுள்ளது. இப் பெறுமதியினுள் 2024 / 2025 வருடத்திற்காக செலுத்திய ரூபா 400,000 வருமான வரியும் உள்ளடங்கியுள்ளது. 2025 / 2026 வருடத்தின் இறுதி காலாண்டிற்கான வருமான வரி பொறுப்பு ரூபா 600,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

iv. 2026-03-31 இல் ஆதன பொறி மற்றும் உபகரண கட்டமைபு கீழ் வருமாறு

| சொத்து | 2026-03-31 இல் கிரயம் | 2026-03-31 இல் முன்கொண்டு வரும் பெறுமதி | எஞ்சிய பெறுமதி | பயனுள்ள ஆயுட் காலம் |
|---|---|---|---|---|
| | (ரூபா '000) | (ரூபா '000) | (ரூபா '000) | (ரூபா '000) |
| காணி | 35,000 | 35,000 | | வருடம் எல்லையற்றது |
| கட்டிடம் | 27,000 | 14,000 | 5,000 | 20 |

| | | | | |
|---|---|---|---|---|
| மோட்டார் வாகனம் | 10,000 | 9,000 | 1,000 | 9 |
| தொழிற். இயந்திரம் | 16,000 | 10,000 | 2,000 | 7 |
| | 88,000 | 68,000 | | |

2026-03-31 இல் முடிவடைந்த வருடத்தினுள் ஆதன பொறி மற்றும் உபகரணம் தொடர்பாக கீழ் வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றுள்ளன.

- 2025-04-01 இல் காணி முதல் தடவை மீள்மதிப்பீடு செய்யப்பட்டதோடு காணி மீள்மதிப்பீட்டின் குறை ரூபா 5,000,000 ஏனைய வருமான கணக்கில் வரவு வைக்கப்பட்டு காணி கணக்கில் செலவு வைக்கப்பட்டது தவிர வேறு எப்பதிவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
- 2025-04-01 இல் இயந்திரங்களுக்கு ரூபா 2,000,000 செலவு செய்து நவீனமயபடுத்தப்பட்டது. பயன்னுள்ள ஆயுட் காலம் இதன் காரணமாக 8 வருடங்களாக அதிகரித்தது. எஞ்சிய பெறுமானம் ரூபா 2,000,000 ஆகும். நவீனமயபடுத்தல் செலவு நிர்வாக செலவாக பதிவுசெய்யப்பட்டது தவிர இவ் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக வேறு எப்பதிவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
- 2026-03-31 இல் மோட்டார் வாகனமொன்று ரூபா 9,500,000 க்கு விற்பனை செய்யப்பட்டதோடு விற்பனையில் பெறப்பட்ட காசு கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதன கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது தவிர இக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக வேறு எப் பதிவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
- 2026-03-31 இல் கட்டிடமானது இரண்டாவது தடவையாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டதோடு மீள்மதிப்பீட்டு மிகை ரூபா 2,000,000 கட்டிட கணக்கில் வரவு வைக்கப்பட்டு ஏனைய செலவு கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது தவிர வேறு எப் பதிவும் இக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
- ஆதனம் பொறி மற்றும் உபகரணம் நேர்கோட்டு முறையின் கீழ் தேய்வு செய்தல் கம்பனியின் கொள்கையாகும்.

v. 2025-04-01 இல் வாடிக்கையாளர் உத்தரவாதத்திற்கான ஏற்பாட்டு கணக்கின் மீதி ரூபா 500,000 ஏனைய சென்மதிகளாக பதிவு செய்யப்பட்டுள்ளது. 2026-03-31 இல் உத்தரவாதத்திற்கான ஏற்பாடு ரூபா 300,000 ஆகுமென நம்பிக்கையுடன் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. வருடத்தில் செலுத்திய ரூபா 600,000 உத்தரவாதத்திற்கான ஏற்பாட்டு செலவு நிதி செலவாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

vi. 2026-03-31 இல் காணப்பட்ட கடன்பட்டோனொருவன் வகையற்று போயுள்ளான் என 2026-04-04 இல் இல் நம்பிக்கையுடன் கம்பனிக்கு அறிந்துக்கொள்ளக்கூடியதாக உள்ளது. அவனிடமிருந்து கிடைக்க வேண்டிய பணம் ரூபா 500,000 ஆகும். இப் பணத்தில் 40% 2025-05-15 இல் அவனுடைய உறவினர் ஒருவரினால் கம்பனிக்கு செலுத்தப்பட்டது.

vii. 2025-04-01 இல் சொத்துப் பயன்பாட்டு உரிமையுள்ள மோட்டார் வாகனம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதோடு 2026-03-31 இல் குறித்த மோட்டார் வாகனம் தொடர்பான தகவல்கள் தரப்படுகின்றன.

| | ரூபா '000 |
|---|---|
| கிரயம் | 6,000 |
| திரண்ட தேய்வு | (1,000) |
| தேறிய பெறுமதி | 5,000 |

2025-04-01 இல் குத்தகைப் பொறுப்பு நிதி நிலைமை கூற்றில் காட்டப்பட்டுள்ளது. 2025 / 2026 க்கும் 2026 / 2027 க்குமான குத்தகை வட்டி செலவு ரூபா 300,000 ரூபா 230,000 ஆகும். செலுத்திய குத்தகை தவணைக் கட்டணம் ரூபா 1,000,000 விநியோக செலவாக பதியப்பட்டிருந்தது தவிர வேறு எப்பதிவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

viii. 2026-01-01 இல் ரூபா 1,000,000 பெறுமதியான பொருள் விற்பனையும் 6 மாத பாராமரிப்பு சேவை வழங்களும் ரூபா 200,000 க்கு வாடிக்கையாளருடன் ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2026-02-01 இல் வாடிக்கையாளரினால் கொடுக்கல் வாங்கலின் மொத்த பெறுமதியாகிய ரூபா 12,000,000 செலுத்தப்பட்டதோடு மொத்த காசு காசு கணக்கில் வரவு வைக்கப்பட்டு விற்பனை கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

2026-03-01 இல் கம்பனி வாடிக்கையாளருக்கு பண்ட தொகையை விற்பனை செய்தது. இது தொடர்பாக வேறு எந்தப்பதிவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ix. ஏனைய வருமதிகளில் உள்ளடங்குள்ள 01-04-2025 ரூபா 1,000,000 பெறுமதியான 10% நிலையான வைப்பும் உள்ளடங்குவதோடு காசும் காசிற்கு சமனானவை என்பதில் ரூபா 1,500,000 6 மாத முதிர்வு காலத்தை கொண்ட திறைசேரி உண்டியல்களும் உள்ளடங்கியுள்ளது.

x. செலுத்திய பங்கிலாபம் ரூபா 200,000 பொது ஒதுக்க கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதோடு இயக்குனர் சபையினால் ரூபா 1,000,000 பிரேரித்த பங்கிலாபம் முன்மொழியப்பட்டுள்ளது.

தேவைப்படுவது

LKAS 01 (நிதிக்கூற்றுக்களை தயாரித்தலும் முன்வைத்தலும) நியமத்திற்கமைய பிரசுரிப்பதற்கான வரையறுக்கப்பட்ட சமாதி கம்பனியின் கீழ் வரும் நிதிக்கூற்றுக்கள் (குறிப்புக்கள் உள்ளடங்களாக)

1. 2026-03-31 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டம் ஏனைய முற்றுமடங்கிய வருமானகூற்று
2. 2026-03-31 இல் முடிவடைந்த வருடத்திற்கான உரிமை மாற்றல் கூற்று
3. 2026-03-31 இல் நிதிநிலைமை கூற்று (40 புள்ளிகள்)

2. அ) வரையறுக்கப்பட்ட சரிகா பொது கம்பனியின் பொருட்களை விற்பனை செய்யும் வணிகமாகும். 2026 மே மாதத்திற்காக தயாரிக்கப்பட்ட களஞ்சிய பேரேடு கீழ் வருமாறு.

| திகதி | பெறுவனவு | | | வழங்கள் | | மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | அளவு | அலகுவிலை | பெறுமதி | அளவு | பெறுமதி | அளவு | பெறுமதி |
| 05 : 01 | | | | | | 10 | 2,000 |
| 05 : 03 | 40 | 210 | | | | 50 | 10,400 |
| 05 : 05 | | | | 40 | 8,300 | 10 | 2,100 |
| 05 : 15 | 50 | 220 | 11,000 | | | 60 | 13,100 |
| 05 : 25 | | | | 50 | 10,900 | 10 | 2,200 |
| 05 : 26 | 50 | 240 | 12,000 | | | 60 | 14,200 |
| 05 : 30 | | | | 40 | 9,400 | 20 | 4,800 |

தேவைப்படுவது

1. கம்பனியின் இருப்பு பெறுமதியிடும் கொள்கை நிறையிடப்பட்ட சாராசரி (WAC) முறையாகும். எனினும் கம்பனி களஞ்சிய பேரேட்டை தயாரித்திருப்பது முதல் உள் முதல் வெளி முறையிலாகும் (FIFO).
2. 2026-05-03 இல் கொள்வனவு செய்த சரியான அலகுகளின் எண்ணிக்கை 60,000 ஆகும்.
3. 2026-05-26 இல் கொள்வனவு செய்த அலகொன்றின் விலை 250 ரூபாவாகும்.
4. அலகொன்றின் விற்பனை விலை 280 ரூபாவாகும்.

தேவைப்படுவது.

1. 2026-05-31 இல் முடிவடைந்த மாதத்திற்கான சரியான களஞ்சிய பேரேடு
2. 2026 மே மாதத்திற்கான மொத்த இலாபம் (08 புள்ளிகள்)

ஆ) வரையறுக்கப்பட்ட சிரான் கம்பனி பொருள் உற்பத்தி கம்பனியாகும். மாதமொன்றிற்கு மூலப்பொருள் 2,000 அலகுகள் தேவைப்படுவதோடு மூலப்பொருள் ஒன்றின் கொள்விலை ரூபா 60 ஆகும். வருடாந்த இருப்பு பேணல் கிரயம் அதன் கொள்விலையில் 10% ஆகும். பொருளாதார கட்டளை கணியம் 4,000 அலகுகள் ஆகும். ஒரு அலகினை உற்பத்தி செய்வதற்காக மூலப்பொருள் 10 அலகுகள் தேவைப்படுகின்றது. மாத காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்படும் அலகுகள் 500 இருந்து 1,500 வரை மாற்றமடையும். சாராசரி கட்டளை காலம் 4 மாதங்களாவதோடு உச்ச கட்டளை காலம் 5 மாதங்களாகும்.

தேவைப்படுவது.

1. கட்டளையொன்றின் கிரயம்
2. சாராசரி இருப்பு மட்டம் (06 புள்ளிகள்)

இ) வரையறுக்கப்பட்ட சாண் பொது கம்பனி மின் விசிறிகளை உற்பத்தி செய்யும் கம்பனியொன்றாகும். ஒன்றிணைத்தல், முடிவுறுத்தல் எனும் இரண்டு உற்பத்தி திணைக்களங்களையும் களஞ்சியம் எனும் சேவை திணைக்களத்தையும் கொண்டுள்ளது. கம்பனி எதிர்பார்க்கும் செயற்பாட்டு மட்டம் 10,000 மின் விசிறிகளாகும். ஒன்றிணைத்தல் திணைக்களத்தினதும் முடிவுறுத்தல் திணைக்களத்தினதும் மேந்தலை கிரய உள்ளடக்கல் வீதம் முறையே நேர் ஊழிய மணித்தியாலங்களை அடிப்படையாக கொண்டும் இயந்திர மணித்தியாலங்களை அடிப்படையாக கொண்டுள்ளது.

கீழ்வருமாறு கம்பனியில் பயிற்சி கணக்கு எழுதுநரினால் மேந்தலை கிரய உள்ளடக்கல் வீதம் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

| கணிப்பிடப்பட்ட உள்ளடக்கல் வீதம் | | ஒன்றிணைத்தல் நேர் ஊழிய மணித்தியாலம் | முடிவுறுத்தல் இயந்திர மணித்தியாலம் |
|---|---|---|---|
| மின் விசிறியொன்றிற்கான சாட்டுதல் செய்த மேந்தலை கிர. | | 400 ரூபா | 300 ரூபா |
| மதிப்பிடப்பட்ட நேர் ஊழிய மணித்தியாலம் | | 40,000 | 30,000 |
| மதிப்பிடப்பட்ட இயந்திர மணித்தியாலம் | | 14,000 | 30,000 |
| அலகொன்றிற்கான இயந்திர மணித்தியாலம் | - உண்மை | 05 | 06 |
| | மதிப்பிடப்பட்ட | 04 | 08 |
| நேர் ஊழிய மணித்தியாலம் | - உண்மை | 05 | 04 |
| | மதிப்பிடப்பட்ட | 06 | 05 |

மேலே மேந்தலை கிரயம் பகுப்பாய்வு அட்டவணை தயாரிக்கும் போது கீழ் வரும் குறைபாடுகளும் வழுக்களும் உள்ளதென கம்பனியின் முகாமையாளரினால் வெளிப்படுத்தப்பட்டது.

i. வருடாந்தம் இயந்திரம் நேர் கோட்டு முறையில் 15% படி தேய்விடல் கம்பனியின் கொள்கையாகும். எனினும் 5% படியே தேய்வு செய்யப்பட்டுள்ளது.

ii. நிர்வாக கட்டிட தேய்வு 600,000 ரூபா கட்டிட நில அளவினை அடிப்படையாக கொண்டு பகிரப்பட்டுள்ளது.

iii. கம்பனியின் மொத்த மின்கட்டண செலவு 1,200,000 ரூபாவாகும். நில அளவினை அடிப்படையாக கொண்டு தொழிற்சாலைக்கு பகிரப்பட்டுள்ளது. தொழிற்சாலை மின் கட்டண செலவு மின்கட்டண செலவின் 2/3 ஆகும்.

iv. களஞ்சிய பொறுப்பாளர் சம்பளம் 250,000 ரூபா சந்தைப்படுத்தல் முகாமையாளரின் சம்பளமாக பதிவு செய்யப்பட்டிருந்தது.

v. சந்தைப்படுத்தல் முகாமையாளரின் சம்பளம் 500,000 ரூபா உற்பத்தி முகாமையாளரின் சம்பளமாக பதிவு செய்யப்பட்டிருந்தது. உற்பத்தி முகாமையாளரின் சம்பளம் 1,000,000 ரூபா நிர்வாக செலவாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

vi. தொழிற்சாலை வரி 600,000 ரூபாவும் இயந்திர காப்புறுதி 700,000 ரூபாவும் தொடர்பாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

vii. பகிர்வு செய்யப்பட்ட களஞ்சிய மொத்த மேந்தலை கிரயம் 800,000 ரூபா உற்பத்தி திணைக்களங்களுக்கிடையில் பொருள் நுகர்வு அலகு எண்ணிக்கைகளை அடிப்படையாக கொண்டு ஆகும்.

மேலதிக தகவல்கள்

1. கீழ் வரும் தகவல்கள் மேந்தலை கிரயம் மீள் பகிர்வு அடிப்படையுடன் தொடர்புடையது

| | தயாரிப்பு | முடிவுறுத்தல் | களஞ்சியம் |
|---|---|---|---|
| இயந்திர கிரயம் (ரூபா'000) | 2,000 | 1,000 | 500 |
| நில அளவு (சதுர அடி) | 1,500 | 1,000 | 500 |
| மின் நுகர்வு (கிலோவோற்) | 4,000 | 2,000 | 2,000 |
| உற்பத்தி முகாமையாளர் எண்ணிக்கை | 3 | 2 | 1 |
| பொருள் நுகர்வு அளவு | 6,000 | 2,000 | |
| பொருள் வேண்டுக்கோள் பத்திரம் | 200 | 200 | |

2. சேவை திணைக்களத்தின் மேந்தலை கிரய மீள் பகிர்வின் சரியான அடிப்படை பொருள் வேண்டுகோள் பத்திரமாகும்.

3. மின் விசிறி உற்பத்தியுடன் தொடர்பான ஏனைய கிரய தகவல்கள் வருமாறு

| | |
|---|---|
| நேர் பொருட் கிரயம் | 3,000 |
| நேர் ஊழிய கிரயம் | 1,000 |
| ஏனைய நேர் கிரயம் | 420 |

இலாப எல்லை உற்பத்தி கிரயத்தில் $66^{2}/_{3}$%

4. உற்பத்தி அல்லா மேந்தலை கிரயம் - மாறும் கிரயம் அலகொன்றிற்கு 100 ரூபா
நிலையான 160,000 ரூபா

வேண்டப்படுவது

1. பகிர்வு அடிப்படையை விளக்கி காட்டி சீராக்கிய மேந்தலை பகிர்வு கூற்று
2. தயாரிப்பு, முடிவுறுத்தல் திணைக்களுக்கான சீராக்கிய மேந்தலை கிரய உள்ளடக்க வீதம்
3. மின் விசிறியுடன் தொடர்பான உற்பத்தி கிரயமும் விற்பனை விலையும்
4. கிரய அடிப்படைகளை விளக்கி காட்டி எதிர்பார்க்கும் வருமான கூற்று

(புள்ளிகள் 26)

(மொத்த புள்ளிகள் 40)

3. அ) வரையறுக்கப்பட்ட வர்சா கம்பனி VAT க்கு பதிவு செய்யப்பட்ட கம்பனியாகும் 2025-01-01 இல் ஆரம்ப சொத்து, பொறுப்பு, உரிமையும் 2026-03-31 இல் முடிவடையும் வருடத்திற்காக இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் கணக்கீட்டு இரட்டை விளைவு தாக்கம் கீழ் வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றது.

| இல | சொத்துக்கள் | | | | | பொறுப்புக்கள் | | | | உரிமை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதன பொறி உபகரணம் | இருப்பு | வியாபார வருமதிகள் | ஏனைய வருமதிகளும் முற்பண கொடுப்பனவுகள் | காசும் காசிற்கு சமனானவை | வங்கி கடன் | வியாபார சென்மதிகள் | ஏனைய சென்மதிகளும் முற்பண பெறுவனவுகளும் | செலுத்த வேண்டிய VAT | கூறப்பட்ட மூலதனம் சா.ப | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | பொது ஒதுக்கம் | நிறுத்தி வைக்கப்பட்ட வருவாய் |
| மீதி | 5,000 | 400 | 600 | 50 | 450 | 1,000 | 500 | 60 | 140 | 3,000 | 1,000 | 300 | 500 |
| 1 | | -250 | | | +354 | | | | +54 | | | | +50 |
| 2 | | +400 | | | -472 | | | | -72 | | | | |
| 3 | | | -500 | | +450 | | | | | | | | -50 |
| 4 | -100 | | | | | | | | | | -100 | | |
| 5 | | | | -50 | | | | | | | | | -50 |
| 6 | | | | | -360 | | -400 | | | | | | +40 |
| 7 | | | | | | | | -60 | | | | | +60 |
| 8 | | | | | +1000 | | | | | +1000 | | | |
| 9 | | | | | -20 | | | | -20 | | | | |
| 10 | | -300 | +590 | | | | | | +90 | | | | +200 |
| 11 | | | | | -150 | -120 | | | | | | | -30 |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | | | | +10 | +40 | | | | | | | | +50 |
| 13 | | +200 | | | | | +236 | | -36 | | | | |
| 14 | | | | | -60 | | +30 | | | | | | -90 |
| 15 | | | | | | | | | | +200 | -200 | | |
| 16 | | | | | | | | | | | | +50 | -50 |
| 17 | | | | | -15 | | | | | | | | -15 |
| | 4900 | 450 | 690 | 10 | 1217 | 880 | 830 | 30 | 156 | 4200 | 700 | 350 | 615 |

மேலதிக தகவல்கள்

வருடத்துடன் தொடர்பான தொழிற்பாட்டு செலவு கம்பனியினால் செலுத்தப்படவில்லை

தேவைப்படுவது

1) மேற்காட்டப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகள் இலக்கம் 01 தொடக்கம் 17 வரையுள்ள பெறுமதிகளின் மூலம் வெளிப்படுத்தப்படும் கொடுக்கல் வாங்கல், நிகழ்வுகளை பெறுமதிகளுடன் எழுதுக

2) 2026-03-31 இல் முடிவடைந்த வருடத்திற்கான கம்பனியின் காலப்பகுதிக்கான இலாபம். (25 புள்ளிகள்)

ஆ) சமனல விளையாட்டு கழகத்தின் 2025-03-31 இல் நிதி நிலைமை கூற்று வருமாறு

| | ரூபா '000 |
|---|---|
| ஆதன பொறி உபகரணம் (தேறிய பெறுமதி) | 3,000 |
| முற்பண இறைவரி | 20 |
| நிலுவை சந்தா | 180 |
| காசு | 400 |
| | 3,600 |
| உரிமையும் பொறுப்புக்களும் | |
| திரண்ட நிதியம் | 2,100 |
| மிகை | 200 |
| | 2,300 |
| ஆயட்கால சந்தா | 500 |
| கட்டிட நிதியம் | 400 |
| மோட்டார் வாகன நன்கொடை | 300 |
| உரிமையாளரின் உரிமை | 3,500 |
| முற்பண சந்தா | 60 |
| அட்டுறு மின் | 20 |
| | 3,600 |

2026-03-31 இல் முடிவடைந்த வருடத்தினுள் கீழ் வரும் கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

i. 2025-04-01 இல் அங்கத்தவர்கள் 100 பேர் காணப்பட்டதோடு இதில் 10 பேர் ஆயுட்கால சந்தாதாரர் ஆவர். மாதாந்த சந்தா கட்டணம் 1,000 ரூபா ஆயுட்கால சந்தா உறுப்புரிமையை பெற்றுக்கொள்ளும் போது வருடாந்த சந்தா பணத்தில் 2,000 ரூபா கழிவு வழங்கப்படல் கழகத்தின் கொள்கையாகும். 2025-04-01 இல் 25 அங்கத்தவர்கள் சேர்ந்துகொண்டதோடு அதில் ஆயுட்கால சந்தாதாரர்கள் 5 பேர் உள்ளடங்குவர். ஆயட் கால சந்தாதாரர் ஒருவர் 10 வருடங்களுக்கான சந்தா பணத்தை செலுத்த வேண்டும்.

ii. புதிய அங்கத்வர் ஒருவர் சேர்ந்துகொள்ளும் போது அனுமதி கட்டணமாக ரூபா 8,000 செலுத்த வேண்டும்.

iii. சந்தாதாரர்கள், ஆயுட்கால சந்தாதாரர்கள் தவிர்த்து 70 பேர் வருடாந்த சந்தா கட்டணத்தை காசாக செலுத்தியிருந்ததோடு அதில் 6 அங்கத்தவர்கள் 2 வருடத்திற்கான சந்தா பணத்தை செலுத்தியிருந்தனர். நிலுவை சந்தாதாரர் 5 பேரிடம் சந்தா பணம் கிடைக்கப்பெறாததோடு அவ் அங்கத்தவர்கள் கழகத்திலிருந்து நீக்கப்பட்டனர். முன்னய வருடத்தில் நீக்கப்பட்ட 10 அங்கத்தவர்கள் முன்னய வருடத்திற்கும் நடப்பு வருடத்திற்குமான சந்தா பணத்தை செலுத்தியிருந்தனர்.

iv. வருடத்தினுள் கட்டிட நிதிக்காக கிடைத்த காசு ரூபா 2,000,000 ஆவதோடு 2025-10-01 இல் ரூபா 200,000 செலவு செய்து கட்டிடம் நிர்மாணித்து முடிக்கப்பட்டது.

v. மோட்டார் வாகன நன்கொடையில் காட்டப்படுவது 2025-10-01 இல் கழகத்திற்கு கிடைத்த நன்கொடையாகும். இன் நன்கொடையானது. பூரணமான 7 வருடங்களில் வருமானமாக அடையாளம் காணல் கழகத்தின் கொள்கையாகும்.

vi. ஆதன பொறி மற்றும் உபகரணம் என்பவற்றினுள் ரூபா 1,000,000 பெறுமதிக்கொண்ட விளையாட்டு மைதானமொன்று உள்ளடங்குவதோடு ஆதன பொறி உபகரணம் என்பவற்றுக்கு ஒடுங்கு பாக முறையில் வருடத்திற்கு 20% தேய்வு செய்தல் கழகத்தின் கொள்கையாகும்.

vii. 2025-04-01 இல் வறுமையிலுள்ள பிள்ளைகளுக்கு புலமை பரிசில் வழங்குவதற்காக நிதியமொன்று ஏற்படுத்தப்பட்டது. இந் நிதியத்திற்கு கிடைத்த காசு ரூபா 800,000 ஆவதோடு வறுமையிலுள்ள பிள்ளைகளுக்கு 700,000 ரூபா புலமை பரிசில் பணத்தொகை 2026-03-31 இல் வழங்கப்பட்டது.

viii. வருடத்தினுள் தொழிற்பாட்டு செலவு காசாக செலுத்தப்பட்டது. 360,000 ரூபாவாகும்.

தேவைப்படுவது

1. 2026-03-31 இல் முடிவடைந்த வருடத்திற்காக கீழ் வரும் விடயங்கள்
   i. சந்தா கணக்கு
   ii. ஆயுட்கால சந்தா கணக்கு
   iii. கட்டிட நிதிய கணக்கு
   iv. புலமைபரிசில் நிதிய கணக்கு
   v. ஆதன பொறி உபகரண கணக்கு
2. 2026-03-31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமான கூற்று
3. 2026-03-31 இல் கழகத்தின் திரண்ட நிதியம் (15 புள்ளிகள்)

(மொத்த புள்ளிகள் 40)

4. அ) லக்சாண் வணிகம் VAT க்கு பதிவு செய்யப்பட்ட நிறுவனமாவதோடு VAT வீதம் 18% ஆகும். 2026 மே மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு

| | |
|---|---|
| 2026-05-01 | லக்சாணினால் ரூபா 1,500,000 காசாகவும் ரூபா 1,000,000 காணிகட்டிடமாகவும் வணிகத்தில் முதலீடு செய்தார். |
| 2026-05-01 | உடன் காசிற்கு கொள்வனவு VAT நீங்கலாக ரூபா 800,000 |
| 2026-05-02 | 600,000 ரூபா கிரயம் கொண்ட பொருள் இருப்பு VAT உடன் ரூபா 944,000 உடன் காசிற்க விற்பனை |
| 2026-05-03 | வங்கி கடன் பெற்றது ரூபா 500,000 |
| 2026-05-05 | கீழ்வரும் நபர்களுக்கு பொருள் கடனுக்கு கொள்வனவு<br>- அமலிடம் VAT உடன் கொள்வனவு ரூபா 826,000<br>- கமலிடம் VAT நீங்கலாக கொள்வனவு ரூபா 500,000 |
| 2026-05-10 | பின்வருவோருக்கு பொருள் கடனுக்கு விற்பனை<br>-300,000 ரூபா கிரயம் கொண்ட பொருட்கள் VAT நீங்கலாக ரூபா 500,000 இற்கு சம்பத்திற்கு விற்பனை<br>-400,000 ரூபா கிரயம் கொண்ட பொருட்கள் VAT உடன் ரூபா 826,000 இற்கு சாகரவிற்கு விற்பனை |
| 2026-05-12 | பெற்ற வாடகை ரூபா 200,000 |
| 2026-05-14 | அமலுக்கு கொடுத்த காசு 450,000 ரூபா கிடைத்த கழிவு 10% |
| 2026-05-18 | சம்பத்தின் கணக்கில் 400,000 ரூபா தீர்ப்பதற்காக கிடைத்த காசு 380,000 ரூபா |
| 2026-05-20 | வணிகத்தினால் உள்நாட்டு இறை வரி திணைக்களத்திற்கு செலுத்திய VAT ரூபா 110,000 |
| 2026-05-22 | கமலின் கடன்கொடுனர் மீதியினால் ரூபா 100,000 சாகரவின் கடன்பட்டோன் மீதி ஈடுசெய்யப்பட்டது. |

2026-05-25 அமல், கமலிடம் கடன் கொள்வனவில் 10% திருப்பப்பட்டது.

2026-05-28 சம்பத், சாகரவிற்கான விற்பனையில் 20% திருப்பி அனுப்பப்பட்டது.

2026-05-30 மின்கட்டணம் செலுத்தியது ரூபா 60,000

2026-05-31 வங்கி கடன் தவணைக்கட்டணம் செலுத்தியது 120,000 ரூபா இப்பெறுமதியினுல் உள்ளடங்கியுள்ள 90,000 ரூபா வங்கி கடனின் மூலதன பங்காகும்.

கட்டிடங்களின் கிரயம் 650,000 ரூபா ஆவதோடு எஞ்சிய பெறுமானம் ரூபா 50,000 ஆகும். அதன் பயனுள்ள ஆயுட் காலம் 5 வருடங்களாகும்.

தேவைப்படுவது.

1. 2026- மே மாதத்திற்கான கீழ் வரும் மூல ஏடுகள்
   - i. காசு பெறுவனவு நாட்குறிப்பு
   - ii. காசு கொடுப்பனவு நாட்குறிப்பு
   - iii. கொள்வனவு நாளேடு
   - iv. விற்பனை நாளேடு
   - v. வெளித்திரும்பால் நாளேடு
   - vi. உட்திரும்பல் நாளேடு
   - vii. குறிப்பேடு
2. 2026- மே மாதத்திற்கான பொது பேரேட்டின் கீழ் வரும் பேரேட்டு கணக்குகள்
   - i. காசு கணக்கு
   - ii. VAT கட்டுப்பாட்டு கணக்கு
   - iii. வியாபார வருமதிகள் கட்டுப்பாட்டு கணக்கு
   - iv. வியாபார சென்மதிகள் கட்டுப்பாட்டு கணக்கு
   - v. வங்கி கடன் கணக்கு

2026- மே மாதத்திற்கான மொத்த இலாபமும் தேறிய இலாபமும் (25 புள்ளிகள்)

ஆ) வரையறுக்கப்பட்ட அமில பொது கம்பனியின் 2026-03-31 இல் முடிவடைந்த வருடத்திற்கான கீழ் வரும் தகவல்கள் தரப்படுகின்றன.

1. வருமான கூற்றில் பெயர்தெடுக்கப்பட்ட தகவல்கள்

| | ரூபா '000 |
|---|---|
| மொத்த இலாபம் | 4,000 |
| பிற வருமானம் | 200 |
| செயற்பாட்டு செலவு | 2,100 |
| வட்டி செலவு | 100 |
| வருமான வரி கொடுப்னவு | 400 |

2. நிதிநிலைமை கூற்றில் பெயர்தெடுக்கப்பட்ட தகவல்கள்

| | 2026-03-31 | 2025-03-31 |
|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 6,000 | 5,000 |
| வியாபார வருமதிகள் | 700 | 900 |
| காசும் காசிற்கு சமனானவையும் | 500 | 400 |
| | 8,500 | 7,000 |
| நிறுத்தி வைக்கப்பட்ட வருவாய் | 1,200 | 300 |
| வங்கி கடன் | 1,000 | 1,000 |
| வியாபார சென்மதிகள் | 1,200 | 500 |
| வருமான வரி ஏற்பாடு | 300 | 200 |
| வேலை செய்யும் நாட்கள் | | 360 |

3. பிற தகவல்கள்

மொத்த இலாப வீதம் 10%

சாதாரண பங்கொன்றின் கூறப்பட்ட விலை 140 ரூபா.

எல்லா விற்பனைகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4. 2025-03-31 இல் முடிவடைந்த வருடத்திற்காக கணிப்பிடப்பட்ட வீதங்கள் வருமாறு

| | |
|---|---|
| இருப்பு பேணும் காலம் | 32 நாட்கள் |
| வியாபார வருமதிகள் சேகரிப்பு காலம் | 25 நாட்கள் |
| உரிமைக்கான வருவாய் வீதம் | 26% |
| தேறிய இலாப வீதம் | 14% |
| கடன் வீதம் | 12% |
| பங்கொன்றிற்கான இலாபம் | 1.20 ரூபா |
| வட்டி காப்பு வீதம் | 8 தடவைகள் |
| பங்கொன்றிற்கான உழைப்பு | 2,90 |

தேவைப்படுவது

1. கீழ் வரும் வீதங்களை கணிப்பிடுக
   - i) இருப்பு பேணும் காலம்
   - ii) வியாபார வருமதிகள் சேகரிப்பு காலம்
   - iii) தேறிய இலாப வீதம்
   - iv) உரிமைக்கான வருவாய் வீதம்
   - v) வட்டி காப்பு வீதம்
   - vi) பங்கொன்றிற்கான இலாபம்
   - vii) பங்கொன்றிற்கான உழைப்பு
   - viii) கடன் வீதம்
2. 2025-03-31 இல் முடிவடைந்த, 2026-03-31 இல் முடிவடைந்த வருடத்தில் வீதங்கள் வளர்ச்சி அடைந்துள்ளதா? வீழ்ச்சி அடைந்துள்ளதா? என்பதை காட்டுக (15 புள்ளிகள்) (மொத்த புள்ளிகள் 40)0

5. தருமன், வீமன், தேவன் பங்குடைமையின் 2025-03-31 இல் நிதி நிலைமை கூற்று வருமாறு

| நடைமுறையல்லா சொத்துக்கள் | கிரயம் | திரண்டதேய்வு | தேறியது |
|---|---|---|---|
| ஆதன பொறி மற்றும் உபகரணம் | 10,000 | 2,000 | 8,000 |
| நடைமுறை சொத்துக்கள் | | | |
| இறுதி இருப்பு | | 800 | |
| வியாபார வருமதிகள் | | 900 | |
| முற்பண நிர்வாக செலவு | | 100 | |
| காசு | | 200 | 2,000 |
| | | | 10,000 |
| உரிமையாண்மையும் பொறுப்பும் | | | |
| மூலதன கணக்கு – தருமன் | | 4,000 | |
| – வீமன் | | 2,000 | |
| – தேவன் | | 2,000 | 8,000 |
| நடைமுறை கணக்கு – தருமன் | | (200) | |
| – வீமன் | | 300 | |
| – தேவன் | | 100 | 200 |
| உரிமையாளர்களின் உரிமை | | | 8,200 |
| நடைமுறையல்லா பொறுப்பு | | | |
| கடன் கணக்கு – தருமன் | | | 800 |
| நடைமுறை பொறுப்பு | | | |
| வியாபார சென்மதிகள் | | 850 | |
| அட்டுறு நிர்வாகச் செலவு | | 150 | 1,000 |
| | | | 10,000 |

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது கீழ் வரும் கொர்டுக்கல் வர்ங்கல்கள் சீராக்கம் செய்யப்பட வேண்டும்.

1. தருமன், வீமன், தேவன் பங்குடைமை வணிகத்தின் ஒப்பந்தம் கீழ் வருமாறு
   - ❖ இலாப நட்ட விகிதமானது மூலதன கணக்கு மீதிகளின் விகிதமாக அமையும்
   - ❖ பங்காளர் சம்பளமானது மாதாந்தம் தருமன், வீமன், தேவன் ஆகியோருக்கிடையில் முறையே ரூபா 30,000, ரூபா 20,000, ரூபா 10,000 ஆகும்.
   - ❖ மூலதனத்திற்கான வட்டி வீதம் 10%
   - ❖ கடனுக்கான வட்டி வீதம் 10%
2. தேவனின் கடன் கணக்கின் மீதியில் 50% 2025-10-01 செலுத்தி முடிக்கப்பட்டது.
3. வருடத்தினுள் கடன்பட்டோரிடமிருந்து கிடைத்த காசு ரூபா 10,400,000 ஆவதோடு கொடுத்த கழிவு 800,000 ரூபாவாகும். வியாபார வருமதிகளின் மதிப்பு குறைவு நட்டம் 400,000 ஆவதோடு பேரேடுகளுக்கிடையிலான மாற்றீடு 800,000 ரூபாவாகும். மொத்த இலாப வீதம் 25%
4. இறுதி இருப்பின் அதிகரிப்பு ரூபா 200,000 ஆவதோடு வியாபார வருமதிகளின் வீழ்ச்சி ரூபா 100,000 ஆகும்.
5. பங்காளரின் பொருள் பற்றுக்கள் தருமன், வீமன், தேவன் முறையே வருமாறு ரூபா 300,000, ரூபா 200,000, ரூபா 100,000 ஆகும்.
6. கடன்கொடுத்தோனிடமிருந்து கிடைத்த கழிவு ரூபா 150,000 ஆவதோடு வெளித்திருப்பம் ரூபா 200,000 ஆகும். 2026-03-31 இல் வியாபார சென்மதிகளின் அதிகரிப்பு ரூபா 50,000 ஆகும்.
7. வணிகத்தின் மோட்டார் வாகனம் 2025-04-01 இலிருந்து தேவனால் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோடு வருடாந்த வாடகை ரூபா 150,000 தொடர்பாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
8. 2026-03-31 இல் ரூபா 300,000 இருப்புக்கள் அழிவடைந்துள்ளதோடு காப்புறுதி கம்பனியினால் 2/3 இழப்பீடு வழங்க தீர்மானித்துள்ளது. இது தொடர்பான பதிவுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.
9. ஆதன பொறி மற்றும் உபகரணம் என்பவற்றினுள் காணி ரூபா 3,000,000 உள்ளடங்குவதோடு ஆதன பொறி உபகரணம் என்பன வருடாந்தம் 5% தேய்வு செய்யப்பட வேண்டும்.
10. வருடத்தினுள் செலுத்திய நிர்வாகச் செலவுகள் ரூபா 770,000
11. 2026-03-31 இல் தருமன் பங்குடைமை வணிகதிலிருந்து விலகியதோடு அன்றைய தினம் அவனது சகோதரனான நகுலன் புதிய பங்காளராக சேர்த்துக்கொள்ளப்பட்டார். அன்றைய தினத்திலான தருமனின் நன்மதிப்பு பங்கு ரூபா 300,000 ஆகும். 2,000,000 ரூபா கிரயம் கொண்டதும் அன்றைய தினம் 1,800,000 ரூபா தேறிய பெறுமதியுடைதுமான மோட்டார் வாகனமொன்றை அதன் தேறிய பெறுமதியில் ஒப்படைப்பதற்கு ஏனைய பங்காளர் இணங்கினர். எஞ்சிய பகுதி நகுலன் செலுத்துவதற்கு இணங்கியதோடு அத் தொகை அவரது மூலதனமாக எடுத்துக்கொள்வதற்கு ஏனைய பங்காளர் இணங்கினர்.

தேவைப்படுவது

1. 2026-03-31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமான கூற்று (பகிர்வு உட்பட)
2. 2026-03-31 இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்காளரின் மூலதன கணக்கும் நடைமுறை கணக்கும்
3. 2026-03-31 இல் உள்ளப்படியான நிதிநிலைமை கூற்று

(30 புள்ளிகள்)

ஆ) சேகரின் வணிகம் VAT க்கு பதிவு செய்யப்பட்ட உற்பத்தி வணிகமாவதோடு பழைய உற்பத்தி இயந்திரம் விற்பனை செய்யப்பட்டு புதிய உற்பத்தி இயந்திரமொன்றை கொள்வனவு செய்வது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. புதிய இயந்திரத்தை 4 வருடங்கள் பயன்படுத்த எதிர்பார்ப்பதோடு அது தொடர்பான மதிப்பிடப்பட்ட தகவல்கள் கீழ் வருமாறு

| | ரூபா'000 |
|---|---|
| புதிய இயந்திரத்தின் கொள்விலை | 5,000 |
| நிறுவதற் மற்றும் இடத்திற்குகொண்டு வரல் செலவு | 1,000 |
| பழைய இயந்திரத்தின் விற்பனை விலை | 1,600 |
| பழைய இயந்திரத்தை கழற்றி அப்புறபடுத்துவதற்கான செலவு | 400 |

| | |
|---|---|
| புதிய இயந்திரத்தின் பயனுள்ள ஆயுட் கால முடிவில் | |
| எதிர்பார்க்கப்படும் விற்பனை விலை | 1,200 |
| பழைய இயந்திரத்தின் தேறிய பெறுமதி | 800 |
| இயந்திரத்திற்கு அறவிடப்பட்ட VAT | 2,000 |

மேலதிக தகவல்கள்

1. தொழிற்படு மூலதனம் ரூபா 500,000 இலிருந்து 800,000 வரை அதிகரிக்கும்.
2. வணிகத்தின் உதவி கணக்கு பதிவாளரினால் கணிப்பிடப்பட்ட வரிக்கு பின் இலாபம் கீழ்வருமாறு

ரூபா'000

| வருடம் | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| வரிக்கு பின் இலாபம் | 800 | 1,200 | 2,000 | 800 |

3. உதவி கணக்கு எழுதுனரினால் வரிக்கு பின் இலாபத்தை கணிப்பிடும் போது கீழ் வரும் வழுக்களும் குறைப்பாடுகளும் ஏற்பட்டுள்ளன என்பது பின்னர் கணக்காளரினால் கண்டுக்கொள்ளப்பட்டது.
    - ❖ வருடாந்த தேய்வு ரூபா 1,600,000 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.
    - ❖ வருடாந்த நிலையான கிரயத்தின் அதிகரிப்பு பெறுமானத் தேய்வு நீங்கலாக ரூபா 500,000 தொடர்பாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
    - ❖ வருடாந்த ஊழிய கிரயத்தின் வீழ்ச்சி ரூபா 100,000 அதிகரிப்பாக பதிவுசெய்யப்பட்டுள்ளது.
    - ❖ வருட விற்பனைக்குள் உள்ளடங்கியுள்ள VAT ரூபா 300,000 விற்பனையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.
    - ❖ வருட கொள்வனவில் உள்ளடங்கியுள்ள VAT ரூபா 200,000 கொள்வனவாக பதிவு செய்யப்பட்டுள்ளது.
    - ❖ வருட வருமான வரி வீதம் 20%
4. முதலீடு தொடர்பாக எதிர்பார்க்கும் நய வீதம் 10% ஆவதோடு அதன் கழிவீட்டு காரணி கீழ்வருமாறு

| வருடம் | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| கழிவீட்டு காரணி | 0.91 | 0.83 | 0.75 | 0.68 |

தேவைப்படுவது.

1. செயற்திட்டத்தில் எதிர்பார்க்கும் அடிப்படை முதலீடும் வருடாந்த தேறிய காசு பாச்சலை சரியாக காட்டும் கூற்று
2. செயற்திட்டத்தின் தேறிய காசு பாச்சலும் (NPV) கொள்வனவு செய்வதற்கான பரிந்துரையும்
3. மீள் அளிப்பு காலம்
4. கணக்கீட்டு சராசரி வருவாய் வீதம் (ARR) (10 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

5. அ) வரையறுக்கப்பட்ட சாந்தி பொது கம்பனியின் 2026-03-31 இலும் 2025-03-31 இலும் நிதி நிலைமை கூற்றுக்ளில் பெயர்தெடுக்கப்பட்ட தகவல்கள் வருமாறு

| | 2026-03-31 | | 2025-03-31 | |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | | ரூபா'000 |
| ஆதன பொறி உபகரணம் - கிரயம் | | 21,900 | | 25,000 |
| - திரண்ட தேய்வு | | 6,000 | | 5,000 |
| முதலீடு | | 1,500 | | 1,000 |
| இருப்பு | | 1,200 | | 1,600 |
| வியாபார வருமதிகள் | 800 | | 700 | |
| வியாபார மதிப்பு குறைவு நட்டபடிகள் | (80) | 720 | (70) | 630 |
| முதலீட்டு வட்டி | | 80 | | 100 |
| காசு | | ? | | 3,200 |

| | | |
|---|---|---|
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் (கட்டிடம்) | - | 400 |
| பொது ஒதுக்கம் | 2,500 | 1,500 |
| நிறுத்தி வைக்கப்பட்ட வருவாய் | 1,500 | 1,000 |
| | | |
| குத்தகை பொறுப்பு | 1,400 | 1,800 |
| வங்கி கடன் | 10,000 | 7,000 |
| வியாபார சென்மதிகள் | 800 | 1,000 |
| வருமான வரி ஏற்பாடு | 150 | 200 |
| செலுத்த வேண்டிய வட்டி | 100 | 200 |
| செலுத்த வேண்டிய மின்கட்டணம் | 50 | 100 |
| வங்கி மேலதிக பற்று | 500 | 400 |

மேலதிக தகவல்கள்

1. 2024-04-01 இல் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 8,000,000 இய்திரமொன்று 2025-10-01 இல் விற்பனை செய்யப்பட்டுள்ளதோடு இயந்திரமானது வருடம் 20% படி நேர்கோட்டு முறையில் தேய்வு செய்வது கம்பனியின் கொள்கையாகும்.
2. 2026-03-31 இல் கட்டிடமானது இரண்டாம் தடைவை மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதோடு மீள்மதிப்பீட்டு குறை ரூபா 500,000 ஆவதோடு அன்றைய தினம் திரண்ட தேய்வு ரூபா 600,000 ஆகும். மோட்டார் வாகனங்கள் வருட காலப்பகுதியினுள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.
3. வருமான கூற்றில் பெயர்த்தெடுக்கப்பட்டவை

| | ரூபா’000 |
|---|---|
| இயந்திர விற்பனை நட்டம் | 600 |
| முதலீட்டு வட்டி | 300 |
| வருமான வரி | 400 |
| வட்டி செலவு | 380 |

4. வருடத்தினுல் கூறப்பட்ட சாதாரணபங்குகளின் அதிகரிப்பு ரூபா 5,000,000 ஆகும். வருடத்தினுல் ஒதுக்குகளை மூலதனமாக்கல் ரூபா 1,200,000 ஆவதோடு இடைக்கால பங்கிலாப கொடுப்பனவு ரூபா 400,000 ஆகும்.
5. வங்கி கடன் தவணைக்கட்டணம் செலுத்தியது ரூபா 1,000,000 ஆகும். குத்தகை வட்டி செலுத்தியது 180,000 ரூபாவாகும்.

தேவைப்படுவது

1. LKAS – 7 காசு பாச்சல் கூற்று நியமத்திற்கமைய 2026-03-31 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசு பாச்சல் கூற்று
2. வங்கி கடன் கணக்கு (20 புள்ளிகள்)

ஆ) வரையறுக்கப்பட்ட அருந்தணி பொது கம்பனியானது மின் கட்டண செலவினை குறைக்க கூடிய மின் குமிழ்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வது தொடர்பாக கவனம் செலுத்தியுள்ளது. உதவி கணக்காளரினால் கீழ் வரும் தகவல்கள் வழங்கப்படுகின்றன.

- மதிப்பிடப்பட்ட நிலையான கிரயம் 300,000 ரூபா
- அலகு மின்குமிழின் பங்களிப்பு 800 ரூபா
- மதிப்பிடப்பட்ட உற்பத்தி, விற்பனை அலகுகளின் எண்ணிக்கை 600 ஆகும்
- பங்களிப்பு விற்பனை வீதம் 40 %

எனினும் உற்பத்தி சந்தைப்படுத்தல் முகாமையாளரினால் கீழ் வரும் வழுக்களையும் குறைப்பாடுகளையும் முன்மொழிவுகளையும் முன்வைத்துள்ளார்.

- அலகொன்றினை உற்பத்தி செய்ய செலவிடப்படும் நேர் ஊழிய கிரயம் ரூபா 400 தொடர்பாக கவனத்தில்கொள்ளப்பட்டிருக்கவில்லை
- அரசாங்கத்தினால் ரூபா 100,000 உற்பத்தி கிரயத்தை தாங்கி கொள்வதற்கு உடன்பட்டுள்ளதோடு அக் கிரயம் நிலையான கிரயமாக பதிவு செய்யப்பட்டுள்ளமை

- அலகொன்றின் விற்பனை விலையை 500 ரூபாவால் அதிகரிப்பதற்கு முன்மொழிதல்
- புதிய மின் குமிழை அறிமுகம் செய்வதற்காக ரூபா 200,000 விளம்பர செலவினை மேற்கொள்வதற்கான முன்மொழிவு
- இயந்திர தேய்வு 150,000 ரூபா 100,000 ரூபாவாக கவனத்தில் கொள்ளப்பட்டது

தேவைப்படுவது

மேற்கூறப்பட்ட வழுக்கள், குறைப்பாடுகள் மற்றும் முன்மொழிவுகளை செயற்படுத்துவதன் பின் கீழ் வரும் விடயங்களை கணிப்பிடுக

i. சரியான நிலையான கிரயம்

ii. அலகொன்றின் விற்பனை விலையும் அலகொன்றின் பங்களிப்பும்

iii. மொத்த கிரயத்தை உள்ளீர்ப்பதற்காக விற்பனை செய்யப்படவேண்டிய மின் குமிழ்களின் எண்ணிக்கை

iv. கம்பனி வருடத்தினுல் எதிர்பார்க்கும் இலாபம் அல்லது நட்டம்

v. 300,000 ரூபா இலாபத்தை பெற்றுக்கொள்வதற்கு விற்பனை செய்யவேண்டிய மின்குமிழ்களின் எண்ணிக்கை

vi. அலகொன்றின் உற்பத்தி கிரயத்தை 25% ஆல் குறைப்பதற்கும் அலகொன்றின் விற்பனை விலையை 20% ஆல் குறைப்பதற்கும் நிலையான கிரயத்தை ரூபா 160,000 இனால் அதிகரிப்பதற்கும் முன்மொழிவு செய்யப்பட்டதெனில்

1. அலகொன்றின் புதிய விற்பனை விலை
2. அலகொன்றின் புதிய மாறும் செலவு
3. எதிர்பார்க்கும் இலாபத்தை பெற்றுக்கொள்வதற்கு விற்பனை செய்யவேண்டிய மின்குமிழ்களின் எண்ணிக்கை

(20 புள்ளிகள்)

(மொத்த புள்ளிகள் 40)